**சுற்றுச்சூழல் துறை இயக்குநர் அவர்களின் புகையில்லா போகிப் பண்டிகையின் முக்கியத்துவம் பற்றி வலைதளம் மூலமாக பொதுமக்களுக்கும் மற்றும் மாணவ சமுதாயத்திற்கும் விடுக்கும் செய்தி**

தமிழ் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 14ஆம் நாளன்று போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது. வீட்டில் உள்ள பழைய மற்றும் தேவையில்லாத பொருட்களை புறக்கணித்து வீட்டில் புதியன வந்து புகுதல் வேண்டும் என்ற நம்பிக்கையில் மக்கள் போகிப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். அன்றைய நாள், வீட்டில் தேங்கிப் போயிருக்கும் குப்பைகள், தேவையற்ற பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டு வீடு சுத்தமாக்கப்படும்.

முந்தைய காலத்தில் மாட்டுச் சாணம், மரக்கட்டைகள் மற்றும் விவசாயக் கழிவுகளை எறியூட்டினர். இதை ஏன் பின்பற்றினார்கள் என்றால் கடுமையான குளிரின் தாக்கத்தை சமாளிப்பதற்காகவே. நாளடைவில், பழைய துணிகள் மற்றும் இதர கழிவுகளை எரிப்பதை மக்கள் பழக்கமாக்கிக் கொண்டனர். இதனால் காற்று மாசுபடுதல் ஏற்பட்டது. இதன் காரணமாக காற்றில் கார்பன் டை ஆக்சைடு மற்றும் விஷ வாயுக்களின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியது. எனவே,

- தேவையற்ற காகிதங்கள் மற்றும் இரப்பர் பொருட்களை எரிக்காமல் மறு சுழற்சிக்கு பயன்படுத்த வேண்டும்.
- மக்காத கழிவுகளை முறையான வழியில் அப்புறப்படுத்தி மக்கும் கழிவுகளை உரமாக மாற்ற வேண்டும்.
- புகையின் மாசுவை குறைப்பதன் மூலம் ஓசோன் படலத்தில் ஏற்படும் பாதிப்பை தவிர்க்க முடியும்.
- காற்றில் மாசுவை கட்டுப்படுத்துவதன் மூலம் கண், மூக்கு, தொண்டை, தோல் மற்றும் சுவாசக் கோளாறுகள் ஏற்படுவதையும் தவிர்க்கலாம்.

எனவே போகிப் பண்டிகை அன்று பழைய பொருட்களை எரிக்காமல் அவற்றை மறுபயன்பாட்டிற்கு பயன்படுத்தி புகையில்லா மாசற்ற போகிப் பண்டிகையை கொண்டாட வேண்டுமென்று பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் துறையின் மூலமாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**“சுற்றுச்சூழலை காப்போம்! இயற்கை வளத்தை பாதுகாப்போம்!**
**மாசற்ற புகையில்லா போகியை கொண்டாடுவோம்”**

**இயக்குநர்**
**சுற்றுச்சூழல் துறை**